Y.M.C.A.

Registerd as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00


# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 9 | [23-06-93] | புதன்கிழமை | ஓசை 125

## பொருளாதாரதடைதளர்வு அரசாங்கம் அறிவிப்பு

வடபகுதிக்கு எடுத்துச்செல்ல தடைவிதித்திருந்த சில பொருள்கள் மீதான தடை தளர்த்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் உத்தியோக பூர்வமாக நேற்று அறிவித்தது. பெற்றோல். எண்ணெய் வகைகள், சிறிய ட்ரான்சிஸ்டர் ரேடியோ, மருந்து வகைகள், காகிதாதிகள், உரம் ஆகியவை மீதான தடையை அரசு நீக்கியபின்னரே ஐந்து பொலிசாரும் விடுவிக்கப்பட்ட (4ஆம் பக்கம் பார்க்க)



நேற்று விடுவிக்கப்பட்ட ஐந்து யுத்தக் கைதிகளும், அவர்களுடைய உறவினர்களும் பருத்தித்துறையிலிருந்து 'நரோமா' கப்பல்மூலம் காங்கேசன்துறை நோக்கிப் புறப்படுவதைப் படத்தில் காணலாம்.

விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட ஐந்து யுத்தக் கைதிகள் தொடர்பான உத்தியோகபூர்வ பத்திரத்தை யாழ். மாவட்ட விசேட தளபதி செல்வராசா சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியிடம ஒபபடைப்பதையும், அருகில் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா நிற்பதையும் படத்தில் காணலாம.



# தடைநீங்கிய பொருள்களை விரைவில் வடக்கே கொண்டுவரத் திட்டம்

### இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கங்களுக்கும், உத்தரவுபெற்ற வர்த்தகர்களுக்குமான சந்திப்பு இன்றுமாலை நான்கு மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் கேட்போர் கூடத்தில் நடைபெறும். மிக முக்கிய அத்தியாவசிய பொருள்களின் கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பாக ஆராயப்படவிருப்பதால் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## பிரிகேடியர் வீரசேகரா இன்று கொழும்பு அவசர பயணம்

(யாழ்ப்பாணம்)

தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்களை கடல் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் விரைவில் எடுத்துவருவதற்கான திட்டம் பற்றி விடுதலைப்புலிகள் இயக்கமும் சிறிலங்கா அரசாங்கமும் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிய

## ஓர் அரசை நிர்வகிக்கும் திறமை புலிகளிடம் உண்டு

### விடுவிக்கப்பட்ட கைதி தெரிவிப்பு

(வடமராட்சி)

விடுதலைப்புலிகள் ஓர் அர

அவர் மேலும் தெரிவிக்கை றார்.

யில், எனது மூன்று வருடகால

''மூன்று வருடங்களாக விடு

வில் விடுதலைப் புலிகளின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். மிக முக்கிய அத்தியாவசிய பொருள்களின் கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பாக ஆராயப்படவிருப்பதால் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# வடக்கே கொண்டுவரத் திட்டம்

## பிரிகேடியர் வீரசேகரா இன்று கொழும்பு அவசர பயணம்

(யாழ்ப்பாணம்)

தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்களை கடல் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் விரைவில் எடுத்துவருவதற்கான திட்டம் பற்றி விடுதலைப்புலிகள் இயக்கமும் சிறிலங்கா அரசாங்கமும் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிய வருகின்றது. வடபகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், இப் பொருள்களை உடன் எடுத்துவர அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என புலிகள் இயக்கம் வலியுறுத்தியுள்ளதாகவும் அறியமுடிகின்றது. இது சம்பந்தமாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோருக்கும், அரசாங்கத் தரப்பில் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிற்கும் இடையில் நேற்றுமாலை இரண்டுமணி நேர பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

நேற்று மாலை 5 00 மணியிலிருந்து 7.00 மணிவரையும் இப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. இப்பேச்சு வார்த்தையில் தடை நீக்கப்பட்ட பொருள்களை விரைவில் வடபகுதிக்கு கொண்டுவருவது பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இச் சந்திப்பில் வடக்கிலுள்ள அரசாங்க செயலகங்கள், அரச திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார்வர்த்தகநிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் அரசாங்கம் வடபகுதிக்கானபொருள்களை விநியோகம் செய்யவேண்டும் என்றும், இவ் விநியோகம் கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் வடபகுதியை வந்தடைய ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் எனவும் விடுதலைப்புலிகள் வற்புறுத்தினர்

இதைத் தொடர்ந்து இவ் விவகாரம் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த பிரிகேடியர்வீரசேகரா அவசரமாக இன்று கொழும்புக்குப் புறப்படுவதாகவும் ஏற்பாடாகியுள்ளது. இவர் நாளை மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவார்.

## சர்வதேச செஞ்சிலுவை ஐவரையும் பொறுப்பேற்றது

(யாழ்ப்பாணம்)

யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் இணங்கியதை அடுத்து ஐந்து யுத்தக் கைதிகள் நேற்று முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டனர்.

இக் கைதிகள் விடுவிப்பு நிகழ்ச்சியில் யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா, விடுவிக்கப்பட்ட ஐவரையும் சிறிலங்கா அரசின் விசேட தூதுவராக யாழ்ப்பாணம் வந்திருக்கும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர முன்னிலையில் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி திரு. பீற் சுவீசரிடம் ஒப்படைத்தார்.

இவர்கள் நேற்று தம்மைப் பார்வையிட வந்த உறவினர்களுடனும் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு வதிவிடப் பிரதிநிதி செல்வி எலிசபெத் ருவின்ச் ஆகியோருடனும் பருத்தித்துறை பயணமாகினர்.

## விடுவிக்கப்பட்ட கைதிகள் உறவினருடன் திரும்பினர்

[வடமராட்சி]

விடுதலைப் புலிகளினால் 1990 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் மூன்று வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த 39யுத்தக் கைதிகளில் ஐவர் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

வடபகுதியில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களான விஜயக்கோன் பண்டா, ஓ.டபிள்யூ ஜி. திசநாயக்க, கமதே பரேமதாச அபேயவிக்கிரம, சரத் சுருநிலமே, குமாரசிங்க பத்திரண ஹலகேலால் குணசேகரா ஆகியோரே நேற்று விடுவிக்கப்பட்டவர்களாவர்.

மேற்படி யுத்தக் கைதிகளை விடுதலைப்புலிகள் அவர்களின் பெற்றோர், உறவினரிடம் நேற்றுகாலைஒப்படைத்தனர். இவர்களில் குமாரசிங்க பத்திரணஹலகே லால் குணசேகரா எழுந்து நடக்க முடியாதநிலையில் காணப்பட்டார். விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகளும் அவர்களது பெற்றோர், உற

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### விருவிக்கப்பட்டோர் கொழும்பு சென்றடைந்தனர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட ஐந்து சிங்களப் பொலிசாரும் நேற்று மாலை 4.45 மணிக்குக் கொழும்பு சென்றடைந்தனர். இவர்கள் விமானப்படையின் அவ்ரோ விமானம் ஒன்றில் நேற்றுமாலை இரத்மலானை விமானத்தளத்தைச் சென்றடைந்தனர். இவர்களுடன் இவ்விமானத்தில் உறவினர்கள் 28 பேரும், யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகரும் சென்றிருந்தனர்.

இன்னும் யாழ்ப்பாணத்தில் உள்ள 34 படையினரும் அரசினால் தடை நீக்கப்பட்ட பொருள்கள் வட பகுதியைச் சென்றடையத் தொடங்கியதும் விடுவிக்கப்படுவர் எனக் கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஓர் அரசை நிர்வகிக்கும் திறமை புலிகளிடம் உண்டு

### விருவிக்கப்பட்ட கைதி தெரிவிப்பு

(வடமராட்சி)

விடுதலைப்புலிகள் ஓர் அரசாங்கத்தை நிர்வகிக்கக்கூடிய ஆற்றலும் திறமையும் கொண்டவர்கள். சிறிலங்கா அரசைவிட அதிக பலம் கொண்டவர்கள்.

மூன்று வருடங்களாக விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட யுத்தக்கைதியான விஜயக்கோன் பண்டா எமது செய்தியாளரிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது மூன்று வருடகால அனுபவத்தில் புலிகளின் வீரத்தைப் புரிந்து கொண்டேன். இவர்களது போர் வீரத்தை சிறிலங்கா அரசினால் செயலிழக்கச் செய்ய முடியாது. இவர்கள் சொன்னதையே செய்வார்கள், செய்வதையே சொல்வார்கள்.

நான் களைப்படைந்திருக்கிறேன். என்னால் அதிகம் கதைக்க முடியவில்லை. அதற்காக நான் வருந்துகிறேன் என்றார்.

"மூன்று வருடங்களாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்த யுத்தக் கைதிகளாகிய எம்மை, புலிகள் எவ்வாறு அனுசரித்தனரென்றும், அவர்கள் எந்த அபிலாசைகளுக்காக போராடுகிறார்களென்பதையும், தென்னிலங்கை பெரும்பான்மை மக்களுக்கும், சிறிலங்கா அரசுக்கும் விளக்குவோம்."

இவ்வாறு எமது நிருபருக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வில் இந்திய அரசு தலையிடாது

### கூட்டுமுயற்சியும் இல்லையாம்

(டில்லி)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவின் எந்தவிதமான அரச பூர்வமான பங்கும் இருக்காது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பின் பின் கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கூட்டுமுயற்சி இடம்பெறலாம் என்ற பேச்சிற்கே இடமில்லை என உறுதியாக தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் ஓர் அரசியல் தீர்வை

( 4ஆம் பக்கம் பார்க்க )

## தடை நீக்கப்பட்ட பொருள்களை அனுப்புவேன்

### அரச அதிபர் தெரிவிப்பு

(வடமராட்சி)

யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று நண்பகல் பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து புறப்பட்ட 'நரோமா' கப்பல்மூலம் கொழும்புக்கு பயணமாவதற்காக காங்கேசன்துறை நோக்கிப் பயணமானார்.

தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்களை யாழ். குடாநாட்டிற்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே கொழும்புக்கு செல்வதாக வடமராட்சி செய்தியாளருக்கு துறைமுகத்தில் வைத்து தெரிவித்தார்.

கப்பல் மூலமும், கிளாலி கடல் நீரேரி மூலமும் இப் பொருள்களை அனுப்ப தக்க நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (யோ)

## கொழும்பில் அதிகாரிகள் மௌனம் சாதிப்பு

(கொழும்பு)

போர்க்கைதிகளை விடுவிக்க விடுதலைப் புலிகள் அரசிடம் என்ன நிபந்தனை விதித்தனர் என்றுகூற கொழும்பில் அதிகாரிகள் மறுத்து வருகின்றனராம். இதுதொடர்பாக அவர்களிடம் அணுகிய போது அவர்கள் எதுவும் கூறாமல் மௌனம் சாதிப்பதாக பி. பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் குறிப்பிட்டார்.

மோட்டார் ஊர்தி

## இரண்டாம் கட்ட பதிவு ஜூன் 30இல் பூர்த்தி

மோட்டார் ஊர்திகளைப பதிவு செய்யும் செயற்பாட்டின் இரண்டாம் கட்ட நடவடிக்கை 30-6-93உடன் முடிவடைகிறது என மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர், நல்லூர் உ. அ. அ. பிரிவுக்கு உட்பட்ட சகல மோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கும் அறியத்தருகின்றனர்.

## வரி விளம்பரம்

### மீண்டும்!

புதிய மெருகுடன் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கும், தரமான சுவையான உணவுபார்சல்கள், (முன் கூட்டியே ஓடருக்கும்) மற்றும் குளிர்பானம், மது பானம் அருந்துவதற்கும் திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது- ஹோட்டல் ஞானம்ஸ்
(சி/6877)

### விற்பனைக்கு

A 40 கார் பாட்ஸ் சாமான்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: க. தங்கராசா, ஸ்ரீமுருகன் வாசிகசாலை லேன் அச்சுவேலி 5194)

### மீரா பிரசுரங்கள்

நாளைய சந்ததிக்காக இன்றைய இலக்கியங்கள். 'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, அக்கினி, சுவடுகள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை.'' விற்பனையாகின்றன. யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி புத்தகசாலைகளில். (5167)

### கொழும்பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி சரமகவிக்குத் தேவையான (Blocks) பழைய படங்களில் இருந்து அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல்—ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். கொழும்பு ஸ்ரூடியோ 55, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (சி-6747)

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து, பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி. சாவகச்சேரி. (சி-6849)

### விற்பனை முகவர் தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு இணக்கம் காண முயற்சி

## - பாரிஸில் பிரதமர் ரணில் அறிவிப்பு

(பாரிஸ்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு கௌரவமானதும் இறுதியுமான ஒரு தீர்வைக் காண்பதற்கு அங்கீகரிக்கக் கூடிய ஓர் இணக்கம் அவசியமானதாகும். எனவே இவ்வாறான ஓர் இணக்கத்தின் அடிப்படையிலான அமைதித் தீர்வொன்றைக் காண்பதற்கான எமது முயற்சிகளை நாம் தளர்த்தப் போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கைத் தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்ற பிரதமர் ரணில், இலங்கையின் பொருளாதார கைத்தொழில் கொள்கை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் போன்றவற்றை விளக்கி உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

சிறுபான்மையினரை ஒடுக்குவதன் மூலமாகவோ அல்லது பெரும்பான்மையினரின் தலைகளின் மீது முரட்டுத்தனமாகச் சவாரி செய்வதன் மூலமாகவோ சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண முடியாது என்பதை சரித்திரமும் உலகின் பல நாடுகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களும் காண்பிக்கின்றன.

தமிழ் மக்கள் தமது சொந்த வாழ்க்கைப் பாதையைத் தீர்மானிப்பதற்கும் தமது வாழ்க்கைத்தரத்தைஉயர்த்துவதற்குமாக அவர்களது திறமையைப் பயன்படுத்துவதற்கும் நாம் உதவ வேண்டும். இதற்கு வடக்கு - கிழக்கில் காணப்படும் ஆயுதப் போராட்டப் பிரச்சினைக்கு ஓர் அமைதி தீர்வு காணப்பட வேண்டும்.

இந்த ஆயுதப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படுவது நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்களுக்கும் நன்மைபயப்பதாகவே இருக்கும். வடக்கு - கிழக்கில் ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சி நாட்டின் ஏனைய பகுதி நலன்களுக்கும் பங்களிப்புச் செய்வதாகவே இருக்கும்.

### வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி

பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணி அளவில் யாழ் முத்துத்தம்பி மகா வித்தியாலய விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது இப் போட்டியின் போது பிரதம விருந்தினராக கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார் கலாசாலை அதிபர் ஆர் எல் நடராசா தலைமையில் நடைபெறும் இப் போட்டியில சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை பொறுப்பாளர் இளங்குமரன், முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் திருமதி க. சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்,

### நூல் வெளியீடு திங்கட்கிழமைக்கு ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றமானது இன்று நடாத்தவிருந்தபுலவர் நா சிவபாதசுந்தரனாரின் 'புறப்பொருள் வெண்பாமாலை' என்னும் புத்தகவெளியீடுதவிர்க்கமுடியாத காரணத்தினால் 28ஆம் திகதி திங்கட்கிழமை நடத்துவதற்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் எதிர்வரும் திங்களன்று பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சிக்கு தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்குவார்சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா, கலாநிதிகாரை செ சுந்தரம்பிள்ளை, திரு. க நாகேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

### மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

இலங்கை மின்சாரசபையை தனியார் மயமாக்கப்படுத்தலைத் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை முன்னிட்டு இன்றுமுதல் இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யவுள்ளனர்.

இதனால் தென் இலங்கையில் மின்சாரம் தடைப்படக் கூடிய சூழ் நிலை இருப்பதாக ராவய ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

### கல்விக் கண்காட்சி

யா/ கோப்பாய் சரவண

### வட. முஸ்லிமகளை மறக்க முடியாது

(கொழும்பு)

முஸ்லீம்களின் மொத்த வாக்கையும்பெற்று கிழக்கைப் பிரிக்கலாம் என்று அரசு மனப்பால் குடிப்பது கிழக்கு முஸ்லிம்கள் குறித்து அரசு தவறாக எடைபோட்டுள்ளதையே காட்டுவதாக சிறிலங்கா முஸ்லிம் கட்சியின் தலைவர் சேகு இஸ்ஸதீன் வெளியிட்ட செய்தி குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார். கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் வடகிழக்கு இணைப்புக்கு மக்கள் கருத்தறிய அரசு முயற்சிக்கும் என வெளியான செய்திகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலத்தை கருத்தில் எடுக்காது கிழக்கு மாகாண முஸ்லிம்கள் நடந்து கொள்ள மாட்டார்கள் என்பதை அரசு மறந்து விட்டது என்றும் சேகு இஸ்ஸதீன் குறிப்பிட்டுள்ளார்.

### நினைவழியா 45-ம் நாள்



லெப்டினன்ட் **தமிழ்மல்லன்**
(வேலு சண்முகம்)

மணலயகத்தில்
பிறப்பெடுத்து
மகிழ்வோடு
நடைபயின்று
சுன்னாகத்தில்
சுழன்றாடியதென்றலே!
மணலாற்றில்
களமாடி

### 45-ம் நாள் நினைவஞ்சலி

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 26 – 05 – 1972 | 10 – 05 – 1993 |



**கப்டன் அகிலன்**
(ஆறுமுகம் சிவஞானம்)

(10-05-93 அன்று முல்லைத்தீவில் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

உறவினர் வருகை குறித்து

### தென்பகுதி பத்திரிகைகள் முக்கியத்துவம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள போர்க் கைதிகளின் உறவினர்கள் புலிகளின் கட்டுப்பாட்டினுள் இருக்கும் யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளமை தென்னிலங்கை பத்திரிகைகளில் முக்கியத்துவம் பெற்ற செய்திகளாக வெளிவந்து கொண்டிருப்பதாக பி. பி. ஸி நேற்று தெரிவித்தது.

அனைத்துப் பத்திரிகைகளும் உறவினர்களின் யாழ் விஜயத்தையொட்டிய புகைப்படங்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டு இவ்விடயத்தைப் பெரும் விவகாரமாக்கியுள்ளதாக பி. பி. ஸி கொழும்பு செய்தியாளர் தெரிவித்தார்.

### நினைவு கூருகின்றோம் ... 1993-06-23

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

★ **சின்னவி** [அன்ரனி எலியாஸ் - வண்ணாங்குளம், செட்டிகுளம், வவுனியா]

1988ஆம் ஆண்டு மட்டு - மாமங்கம் பகுதியில் தேசவிரோதசக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஈஸ்வரன்** [... ... மாமங்கம் - மட்டு]

1990ஆம் ஆண்டு மட்டு - கும்புறுமூலைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**வீனஸ்** [செல்லையா பத்மநாதன் - கிரான், மட்டு]

மட்டு - உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**சீனு** [இருபைராஜ் கயதாஸ் - பெரியகல்லாறு, மட்டு]

**அலோசியஸ்** [... புவிராஜசிங்கம் - கோட்டைக்கல்லாறு - மட்டு]

**நகுலேஸ்** [கணபதிப்பிள்ளை சோமேஸ்வரன் - கரடியாறு - மட்டு]

**வேட்டோ சின்னவன்** [சுப்பிரமணியம் விஜயகுமார் - மண்டூர் - மட்டு]

மணலாறு - செம்மலைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் அகஸ்ரின்** [சிங்கராசா சேகர் - பனங்கட்டிக் கொட்டு - மன்னார்]

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சித்** [சின்னச்சாமி இராசு - மாயனூர், வட்டக்கச்சி - கிளிநொச்சி]

**நவசீலன்** [... ... முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி]

**சுந்தரராசா** [... ... ...]

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**சுந்தரம்** [நியூட்டன் கமிலஸ் பெரேரா - 8-ம்வட்டாரம், பேசாலை - மன்னார்]

**2-லெப். ரெனோ** [விநாயகமூர்த்தி திவாகரன் - மறவன் புலோ, சாவகச்சேரி - யாழ்]

இதே பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**லாலா** [கறுப்பன் தவச்சந்திரன் -முழங்காவில்-மன்னார்]

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர் போட்டு எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பொத்துவில் - ஏத்தம் தொட்டைப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

வீதி யாழ்ப்பாணம். (சி-6747)

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து, பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6849)

### விற்பனை முகவர் தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கரவண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல்பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (சி-6862)

### கருச்சிதைவுக்கு சிறை வாசம்

இந்தியாவைச் சேர்ந்த (64 வயது) வைத்தியர் ஒருவர் சட்ட விரோத கருச்சிதைவுகள் செய்தார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்க நீதிமன்றம் அவருக்கு 29 வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது. இவர் கருச்சிதைவு செய்த சிசு ஒன்று பூரணமாக சிதைவுக்குள்ளாகாத நிலையில் துண்டிக்கப்பட்ட கைகளுடன் பிறந்தமை நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

### "உண்மைகள்" நூல் வெளியீட்டு விழா

'உண்மைகள்' நூல் வெளியீட்டு விழா யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 26ஆம திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணியளவில் திரு செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது. திரு. வளவை வளவனால் எழுதப்பட்ட இந்நூலின் வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை நிகழ்த்தவுள்ளார். யாழ் பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் கா சிவத்தம்பி, திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோர் ஆய்வுரைகள் வழங்கவுள்ளனர்.

---

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
| --- | --- |
| 26 | 10 |
| — | — |
| 05 | 05 |
| — | — |
| 1972 | 1993 |



## கப்டன் அகிலன்

(ஆறுமுகம் சிவஞானம்)

(10-05-93 அன்று முல்லைத்தீவில் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

எண்ணும் எழுத்தும் கண்
மண்ணும் மானமும் கண்
வீரமும் விவகமும் கண் - மா
வீரா என்றும் நீ எங்கள் கண்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணிமார்,
அக்காமார், அத்தான்மார்.

அம்மன் கோவில்,
அராலி கிழக்கு,
அராலி.

(5196)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரப்பிறப்பு: | வீரச்சாவு: |
| --- | --- |
| 1972 | 1992 |
| — | — |
| 04 | 07 |
| — | — |
| 05 | 03 |



## லெப். ராஜேஸ்

(கந்தையா சிறி சுதாகரன்)

(ஆழியவளை, தாளையடி)

பால்மணம் மாறாப் பாலன் என
நாம் நம்பியிருந்தோம் — நீயோ
ஈழக் கனவுகளை இதயத்தில் சுமந்து
இனிய தமிழ் காக்க சென்றாய் ராஜேஸ்
மண்டலாய் மண்ணில் வீரத்தை உலகறிய
வைத்தவர்களில் ஒருவன் ஆனாய்
நீ வீழ்ந்த இடத்தில் விடியல் பூக்கும்
சுதந்திர தமிழீழம் நிச்சயம் நாளை மலரும்.

மண்டலாயில் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது வீர வணக்கத்தை செலுத்துகின்றோம்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்.

(5180)

---

தரம்பிள்ளை, திரு. க நாகேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

### மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தம்


இலங்கை மின்சாரசபையை தனியார் மயமாக்கப்படுத்தலைத் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை முன்னிட்டு இன்று முதல் இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யவுள்ளனர்.

இதனால் தென் இலங்கையில் மின்சாரம் தடைப்படக் கூடிய சூழ் நிலை இருப்பதாக ராவய ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

### கல்விக் கண்காட்சி

யா/ கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயத்தினர் வழங்கும் கல்விக் கண்காட்சி இன்று மு.ப 9மணியளவில் கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயத்தில் அதிபர் திரு. நா. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு துரை தியாகராசா கலந்து கொள்வார்.

---



லெப்டினன்ட்

## தாசிழ்மல்லன்

(வேலு சண்முகம்)

மலையகத்தில்
பிறப்பெடுத்து
மகிழ்வோடு
நடைபயின்று
சுன்னாகத்தில்
சுழன்றாடியதென்றலே!
மணலாற்றில்
களமாடி
மண்ணுக்காய்
மரணித்தாய்
மாவீரா – நீ
வாழ்கவே.

உறவினர், நண்பர்கள்.
சுன்னாகம் தெற்கு.

(5190)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு:
02. 01. 1974

வீரச்சாவு:
28. 06. 1992

## 2-ம் லெப். கங்காமுனி (கங்காளன்)

(யேசுதாசன் பேர்னாட்ஷா)

மண்மீட்கச் சென்ற எங்கள் மாவீரனே! உந்தன்
தியாகத்தை எண்ணுகையில் தேகம் சிலிர்க்குதடா
விண்ணுலகம் சென்றாலும் விளங்கு தமிழ் ஈழத்தை
அண்ணலே நீ காண்பாய் அதில் ஐயமில்லையடா
புண்ணியனே கர்த்தனடி போய் அமைதி கொண்டிடுக
எண்ணிய உன் ஈழமது இனிதாய் மலருமையா
கண்மணியே உன் நினைவு காலமெலாம் வாழுமையா.

இவரின் பிரிவால் துயருறும்
அப்பா. அண்ணா. அக்காமார்,
அண்ணி, மைத்துனர்மார்,
நண்பர்கள்.

15/16, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

வீரன் மண்ணில் புதையும்போது
விதையாய்த்தான் இருப்பான்.

(5195)

---

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சித்** [சின்னச்சாமி இராசு - மாயனூர், வட்டக்கச்சி - கிளிநொச்சி]

**நவசீலன்** [... ... முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி]

**சுந்தரராசா** [... ... ...]

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**சுந்தரம்** [நியூட்டன் கமிலஸ் பெரேரா - 8-ம்வட்டாரம், பேசாலை - மன்னார்]

**2–லெப். றெனோ** [விநாயகமூர்த்தி திவாகரன் - மறவன் புலோ, சாவகச்சேரி - யாழ்]

இதே பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**லாலா** [கறுப்பன் தவச்சந்திரன் -முழங்காவில்-மன்னார்]

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர் போட்டு எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பொத்துவில் - ஏத்தம் றொட்டைப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

மட்டு - பெரியபோரப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர், எல்லைநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட தமிழ்த்தொழி ாளி.

திருமலை-நிலாவெளிப்பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாம்மீது சிறிலங்கா விமானப்படை மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 30 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு திருமலை – தம்பலகமம் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய-

**சுரேஷ்** (பாலசுப்பிரமணியம் ஞானசீலன்-21/3. வித்தியாலயவீதி, காளிகோவிலடி –திருமலை]

**லோஜன்** (ஞானப்பிரகாசம் லோறன்ஸ்-6-ம் வட்டாரம், கண்டிவீதி, கப்பல் துறை-திருமலை)

மணலாறு-மகிண்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய-

**சோழன்** (தனபாலசுப்பிரமணியம் இராஜராஜன் - அப்பிலானை வடக்கு, கோப்பாய்வடக்கு-யாழ்)

யாழ்-கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப்.ரவிராஜ்** (சின்னராசா தவராசா - கும்பிழாவளை, அளவெட்டி-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொலலப்பட்ட வேப்பவெட்டுவானைச்சேர்ந்த கூலிவிவசாயியான தமிழிளைஞன்

1992ஆம் ஆண்டு யாழ்-கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய

**2 ம் லெப். சுரேஸ்** (காசிப்பிள்ளை சிவராசா-மல்வத்தை மல்லிகைத்தீவு-அம்பாறை)

மட்டு-தும்பன்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய-

**மேஜர் பயில்வான்** [சின்னத்தம்பிசிவராசா-முனைக்காடு, கொக்கட்டிச்சோலை-மட்டு)

**கப்டன் கீர்த்தி** (கைலாயபிள்ளை உதயகுமார் -எருவில், களுவாஞ்சிக்குடி-மட்டு)

யாழ்-பொன்னாலையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண் அடைந்து சிகிச்சையின் போது மருத்துவமனையில எமைப் பிரிந்த,

**2-ம் லெப். கங்காமுனி** (யேசுதாசன்பேனாட்ஷா-15/16 மத்தியூஸ்வீதி, குருநகர்-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6880)

சிந்தனைக்கு

உற்சாகத்துடன் தாங்கிக்கொள்ளும் போது சுமையின் கனமும் குறைந்து விடும்.

ஓவிட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# புலிகளுக்கு கிட்டிய இராஜதந்திர வெற்றி

போர்க் கைதிகளை விடுதலை செய்ய விடுதலைப்புலிகள் இயக்கம் விதித்த நிபந்தனையை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம் தடைவிதிக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடையை சிறிலங்கா அரசாங்கம் நீக்கிக் கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளது. இத் தடை நீக்கமானது பொருளாதாரத் தடையால் பெரும் அவதிக்குள்ளான தமிழ் மக்களுக்கு பேருதவி புரியக் கூடியதாகும்.

இச்சாதனையானது விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த இராஜதந்திர வெற்றியாகும். ஒரு அரசியல் ரீதியான சாதனையாகும். விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாத நிலையில், அதற்குத் துணையாகக் கொண்டுவரப்பட்ட பொருளாதாரத் தடையின் பெரும் பகுதியை இவ் இராஜதந்திர நடவடிக்கை மூலம் புலிகள் வெற்றி கண்டுள்ளனர். அத்தோடு இவ்வெற்றியில் தமிழ் மக்களுக்கும் நன்மையுண்டு. பெருமைப்பட்டுக் கொள்ள காரணமுமுண்டு. உறுதியோடு இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கான எடுத்துக் காட்டுமாகும்.

இதேவேளை, சிறிலங்கா அரசு இந்நிபந்தனைக்கு எவ்வாறு இணங்கியது என்பதும், இவ் உடன்பாட்டை இதய சுத்தியுடன் நிறைவேற்றுமா என்பது குறித்து பரவலான கேள்வியும் உண்டு. தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறான கேள்வி எழுப்புவது நியாயமே. ஏனெனில் கடந்த காலங்களில் உடன்பாடுகள் / ஒப்பந்தங்கள் என்பனவற்றை எழுதிய மை காய முன்னரே சிங்கள அரசியல் தலைவர்கள் அவற்றைக் கிழித்தெறிந்ததுண்டு.

இதன் அடிப்படையிலேயே இக் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஆனால், இதனை விடுதலைப் புலிகளும் உணராமல் இருக்க மாட்டார்கள். ஆனால், தலைவர் பிரபாகரன் இவ்விடயத்தில், தமது இராஜதந்திரத்தை மட்டுமல்ல, அகிம்சை தத்துவத்தில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள மதிப்பையும் வெளிக்காட்டியுள்ளார். அதாவது, சிறிலங்கா அரசாங்கத்தை நிபந்தனைகளை ஏற்க வைத்தமை இராஜதந்திர வெற்றி என்றால் ...

# தமிழர்களை அச்சுறுத்தி அகற்றுவதே நோக்கம்

## கொழும்பில் தமிழர் கைதுபற்றி அவதானிகள் கருத்து

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்வாழும் தமிழ் மக்களை அச்சுறுத்தியும் துன்புறுத்தியும் அங்கிருந்து வெளியேற்றுவதற்குத் தான் பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரிலான திடீர் கைது நடவடிக்கை இடம்பெறுவதாக கொழும்பில் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள தமிழ்மக்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் பெருமளவில் சிறிலங்காபொலிசாரால் திடீர் திடீரெனக் கைது செய்யப்பட்டு வருவது தெரிந்ததே. அரசின் இத்தகைய நடவடிக்கை சிறுபான்மைத் தமிழ்மக்கள் மத்தியில் அச்சம் மட்டுமன்றி பலத்த சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுசன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 40ஆவது பிரிவின் கீழ் எந்தப் பகுதியிலும்உள்ள குடியிருப்பாளர்கள் தமது இல்லங்களில் வசிக்கும் குடும்ப உறுப்பினர்கள் பணியாட்கள் மற்றும் ஆட்கள் ஆகியோர் பற்றிய விபரங்களை குறித்த பகுதி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும் என கடந்த வருடம் நவம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதியின் பிரகடனம்ஒன்றின்மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலை ஏற்று பதிவுகளைச் செய்ய பலரும் பொலிஸ் நிலையங்களை நாடிய போது உரிய பத்திரங்கள் போதியளவு வழங்கப்படவில்லை. பதிவுகள் பற்றிய விளக்கங்களைஅளிக்கும் நிலையிலும் பொலிஸ் அதிகாரிகள் பலர் இருக்கவில்லை.

நிரந்தரமாகத் தங்கியிருப்போர் பதிவு செய்யவேண்டுமா? வடக்கு - கிழக்கிலிருந்து வந்து தங்கியிருப்போர் மட்டும் பதிவு செய்ய வேண்டுமா? என்பன போன்ற விபரங்கள் கூட பொலிஸ் நிலையங்களால் தெளிவாக்கப்படவில்லை.

ஒவ்வொரு குடியிருப்பாளரும் விபரங்களை பதிவு செய்ய வேண்டும் என அவசரகாலச் சட்ட விதி வலியுறுத்திய போதும் பெரும்பான்மை இனத்தவர்களைப் பதிவு செய்வதில் அவ்வளவாக அக்கறை செலுத்தப்படவில்லை. இலங்கை முழுவதும் இந்தவிதி இருந்த போதும் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும்தவிர 90 சத வீதமான பகுதிகளில் இந்த விதி அமுல் நடத்தப்படவில்லை.

குடியிருப்பாளரைப் பதிவு செய்வதில் பொலீஸ் நிலையங்கள் பலதரப்பட்ட நடைமுறைகளை இடத்துக்கிடம் மாற்றமான முறையிலும் அமுல்நடத்தின. இப்படியெல்லாம் அவசரகாலச் சட்டவிதி குழப்பமான முறையில் அமுல் நடத்தப்பட்டதால் குடியிருப்பாளர்களும் குழப்பமான முறையிலேயே செயல்பட நேரிட்டது.

ஆறு மாதங்களின் பின் இந்தப் பதிவுகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு திடீர் திடீரென தமிழ் வாலிபர்களையும் யுவதிகளையும் சோதனையிடுவதும் கைது செய்து தடுத்து வைப்பதும் பலதரப்பட்ட சிக்கல்களை உருவாக்கியுள்ளன.

தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும்

# அரசின் முடிவை மாற்றும்படி கோரிக்கை விடுப்பேன்

## – சுவிஸ் தூதுவர் தெரிவிப்பு

[கொழும்பு]

இலங்கை அகதிகளை திருப்பியனுப்ப சுவிஸ் அரசு மேற்கொண்டுள்ள முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு சுவிஸ் அரசை தாம் கேட்டுக் கொள்வதாக சிறிலங்காவிற்கான சுவிஸ் தூதுவர் அன்ட்ரூ விகிரசென்ட் ரெய்ட் தெரிவித்தார். இவர் தமது நாட்டிற்கு மூன்று வாரகால விஜயமொன்றை மேற்கொண்டு புறப்பட இருப்பதையடுத்து சுவிஸ் தூதுவர் இந்த உறுதிமொழியை தெரிவித்தார்.

1992 செப்டம்பருக்கு பின்னர் சுவிற்ஸர்லாந்து சென்ற 1600 இலங்கைத் தமிழரையும் திருப்பியனுப்புவதற்கான தீர்மானம் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டது. எவ்வாறெனினும் அந்தத் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு நான் எனது அரசிடம் கேட்டுக்கொள்வேன் என்று சுவிஸ் தூதுவர் குறிப்பிட்டார்.

சுவிற்ஸர்லாந்தில் 23 ஆயிரம் இலங்கை அகதிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்ளைகள் தொடர்பாக

# இராணுவத்திலிருந்து ஓடிய சிப்பாய்கள் இருவர் கைது

(கொழும்பு)

பல கொள்ளைகளில் ஈடுபட்ட, இராணுவத்திலிருந்து விலகிய இருநபர்களை பொலிசார் அநுராதபுரத்திலிருந்து துரத்திச் சென்று இறுதியில் நீர்கொழும்பில் வைத்து அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரையும் கைது செய்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

காயமடைந்த இந்த இரு சிப்பாய்களும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ...

## யோகாசன கருத்தரங்கு

சர்வமத யோகாசன ஸ்தாபனம் மாதந்தோறும் நடத்தும் யோகாசன கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிறன்று திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் ...

## இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

(வடமராட்சி)

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை கிராமிய மட்டத்தில் நடமாடும் சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதன் முதற்கட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் இந் நடமாடும் சேவையில் மகளிர் பொற்கணக்கு, சிறுவர் சேமிப்புத் திட்டம் போன்றவற்றின் ...

# சமஷ்டி அடிப்படையில் பிரச்சினைக்கு தீர்வு

## தமிழ். பா உ. கோரிக்கை

(கொழும்பு)

ஒற்றையாட்சி முறையை மாற்றி வடக்கு கிழக்கிற்கு சமஷ்டி என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை அரசாங்கம் காண வேண்டும். இதற்கு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒத்துழைக்க வேண்டும் என தமிழ் எம். பி. ஒருவர் பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த தெரிவுக்குழு முடிவெடுத்ததாக முதலில் செய்திகள் வந்தன. பின்னர் இது மறுக்கப்படுகிறது. தெரிவுக்குழுவின் குறிப்பேட்டைப் பார்த்தால் அத்தகைய தீர்மானம் ஏதும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

கடந்த சில தசாப்தங்களாக கிழக்கில் சுமார் மூன்று லட்சம் சிங்களவர்கள் திட்டமிடப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளனர். இந்த குடியேற்றக்காரர்கள் வடக்கு-கிழக்கு தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்க அனுமதிக்க முடியாது. இன்றுகூட திருக்கோணமலையிலும் வவுனியாவிலும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருக்கோணமலை நகரில் வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கி அதை சிங்கள மக்களுக்கு வழங்க அமைச்சர் சிறிசேனகூரே முடிவு செய்துள்ளார். திருமலை நகரில் 69சத வீதத்தினராக வாழும் தமிழர்களை சிறுபான்மையினராக்கி அவர்களின் விகிதாசாரத்தை குறைப்பதற்கே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. வன்செயல்களினால் அகதிகளாக ஓடிவிட்ட திருக்கோணமலை தமிழர்கள் பலரின் வீடுகளிலும் காணிகளிலும் சிங்களவர்கள் குடியேற்றப்படுகிறார்கள் வவுனியாவில் பௌத்தபிக்கு தலைமையில் குடியேற்றம் நடக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தடுப்பு முகாம்களிலுள்ள

# அப்பாவி இளைஞர்களை உடனடியாக விடுவிக்குக

## மனித உரிமைகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

தடுப்பு முகாம்களிலும், புனரமைப்பு முகாம்களிலும் எவ்வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி மனித உரிமைகள் சங்க காலி மாவட்டக் கிளை ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைத்திருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, கடந்த பயங்கரவாத காலத்தில் இலங்கை முழுவதும் ஏற்படுத்தப்பட்ட தடுப்பு முகாம்களிலும், புனரமைப்பு முகாம்களிலும் உள்ள இளைஞர்கள் படும் வேதனைகள், எதிர்காலம் பற்றிய அவர்களது சிந்தனைகள்பற்றி நாம் கவனம் எடுக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஜயலத் ஆணைக் குழுவினர் விரக்தியடைந்திருந்த இளைஞர்களிடம் பொய் வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஏமாற்றி விட்டனர். சில தடுப்பு முகாம்களில் கைதிகள் தப்பி ஓட முயன்றனர் எனக்கூறி, வெடி வைத்துக் கொலை செய்தனர். அவை விசாரணை இன்றிப் போய்விட்டன.

# மட்டக்களப்பு செல்ல பஸ் ஏற அகதிகள் மறுப்பு

## அகதிகளுக்கு உதவி நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா அகதி முகாமில் உண்ணாவிரதமிருக்கும் அகதிகளை மட்டக்களப்பு கூட்டிச்செல்ல சமூகசேவை திணைக்களம் 10 பஸ்களை கொண்டு சென்ற போதிலும் அதில் ஏற அகதிகள் மறுத்துவிட்டனர். முகாமின் வாயிலை மூடிவிட்டு இவர்கள் தொடர்ந்து முகாமிற்குள் உண்ணாவிரதமிருக்கின்றனர்.

இதேசமயம் இம்முகாமிலுள்ள 330 அகதிகளுக்கும் அரசு இதுவரை அளித்துவந்த உதவிகளை நிறுத்திக்கொண்டு விட்டது.

# விடுவிக்கப்பட்ட வாலிபர் ...

மக்களுக்கும் நன்மையுண்டு. பெருமைப்பட்டுக் கொள்ள காரணமுமுண்டு. உறுதியோடு இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கான எடுத்துக் காட்டுமாகும்.

இதேவேளை, சிறிலங்கா அரசு இந்நிபந்தனைக்கு எவ்வாறு இணங்கியதுஎன்பதும், இவ்உடன்பாட்டை இதய சுத்தியுடன் நிறைவேற்றுமா என்பது குறித்து பரவலான கேள்வியும் உண்டு. தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறான கேள்வி எழுப்புவது நியாயமே. ஏனெனில் கடந்த காலங்களில் உடன்பாடுகள் / ஒப்பந்தங்கள் என்பனவற்றை எழுதிய மை காய முன்னரே சிங்கள அரசியல் தலைவர்கள் அவற்றைக் கிழித்தெறிந்ததுண்டு.

இதன் அடிப்படையிலேயே இக்கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஆனால், இதனை விடுதலைப் புலிகளும் உணராமல் இருக்க மாட்டார்கள். ஆனால், தலைவர் பிரபாகரன் இவ்விடயத்தில், தமது இராஜதந்திரத்தை மட்டுமல்ல, அகிம்சை தத்துவத்தில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள மதிப்பையும் வெளிக்காட்டியுள்ளார். அதாவது, சிறிலங்கா அரசாங்கத்தை நிபந்தனைகளை ஏற்க வைத்தமை இராஜதந்திர வெற்றி என்றால் நிபந்தனைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த முன்னர். ஒரு தொகுதி கைதிகளை விடுதலை செய்ய முற்பட்டமையானது கைதிகளின் அகிம்சைப் போராட்டத்திற்கு அளிக்கப்பட்ட கௌரவமாகும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இச்சூழ்நிலையை நல்லதொரு முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அதன் பொறுப்பாகும். இதனை விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், உண்ணாவிரதத்தின் முடிவின் போது ஓரளவு தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் ''நீங்கள் மேற்கொண்ட அகிம்சை வழிப் போராட்டமானது உங்களது விடுதலைக்கு வழி கோலியதுடன் தமிழ் மக்கள் மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையைநீக்குவதன் மூலம் தமிழ் மக்கள் சுமந்த பளுவும் குறைவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இச் சூழ்நிலையானது சமாதான முயற்சிகளுக்கு முன்னோடியாக அமையக் கூடிய வாய்ப்புடையது'' என்றார்.

அதாவது, கைதிகள் விடுதலை தொடர்பாக ஏற்பட்ட உடன்பாடு, ஒரு நற்சகுனம் போன்றது. அரசாங்கம் அதனைப் பயன்படுத்திக் கொண்டால் இனப்பிரச்சினை குறித்து ஒரு சுமுக முடிவை உருவாக்க உதவக் கூடும். இந்நிலையில், அரசாங்கம் இச் சூழ்நிலையை துஷ்பிரயோகம் செய்து போரை தொடருமா, அல்லது இனப்பிரச்சினை தீர்விற்கு ஆக்க பூர்வமான முயற்சியை மேற்கொள்ளுமா என்பதெல்லாம் அரசைப் பொறுத்தவிடயம்.

ஆனால், அரசாங்கம் இதனை ஒரு பொருட்டாக எடுக்காமல் கைதிகள் பரிமாற்றத்திற்கான ஒரு நடவடிக்கை என மட்டுமே நோக்குமேயானால், அதாவது கைதிகள் பரிமாறப்பட்டதன் பின் அரசாங்கம் தனது ஒப்பந்தத்தை / நிபந்தனைகளை ஏற்காது விடுமேயானால், பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு இது போன்றதொரு சந்தர்ப்பத்தை அண்மைக்காலத்தில் அரசாங்கத்தால் உருவாக்க முடியாது!

இந் நிலையில், கைதிகளின் விடுதலை என்பது ஒரு தனிப்பட்ட பிரச்சினையின் முடிவல்ல. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான ஒரு சூழலை உருவாக்கியுள்ள நடவடிக்கையும் கூட. இதனை விடுதலைப் புலிகள் உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள். ஆனால் இதனை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளும் ? ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்ளுமா என்பதைப் பொறுத்தே இலங்கையில் போரும் / சமாதானமும் தீர்மானிக்கப்பட முடியும்.

அரசை தாம் கேட்டுக் கொள்வதாக சிறிலங்காவிற்கான சுவிஸ் தூதுவர் அன்ட்ரூ வி கிரசென்ட் ரெய்ட் தெரிவித்தார். இவர் தமது நாட்டிற்கு மூன்று வாரகால விஜயமொன்றை மேற்கொண்டு புறப்பட இருப்பதையடுத்து சுவிஸ் தூதுவர் இந்த உறுதிமொழியை தெரிவித்தார்.

கப்பட்டு விட்டது. எவ்வாறெனினும் அந்தத் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு நான் எனது அரசிடம் கேட்டுக்கொள்வேன் என்று சுவிஸ் தூதுவர் குறிப்பிட்டார்.

சுவிற்ஸர்லாந்தில் 23 ஆயிரம் இலங்கை அகதிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கொள்ளைகள் தொடர்பாக

## இராணுவத்திலிருந்து ஓடிய சிப்பாய்கள் இருவர் கைது

(கொழும்பு)

பல கொள்ளைகளில் ஈடுபட்ட, இராணுவத்திலிருந்து விலகிய இருநபர்களை பொலிசார் அநுராதபுரத்திலிருந்து துரத்திச் சென்று இறுதியில் நீர்கொழும்பில் வைத்து அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரையும் கைது செய்த சம்பவம் அண்மையில் இடம் பெற்றது.

காயமடைந்த இந்த இரு சிப்பாய்களும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். தம்முடன் பல கொள்ளைகளில் ஈடுபட்ட இராணுவத்தை விட்டு தப்பி வந்த மற்றுமொரு நபரும் சம்பந்தப் பட்டுள்ளதாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இந்த இருவரும் பொலிசாரிடம் தெரிவித்தனர். இவர்கள் ஐந்து கொள்ளைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### யோகாசன கருத்தரங்கு

சர்வமத யோகாசன ஸ்தாபனம் மாதந்தோறும் நடத்தும் யோகாசன கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிறன்று திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது மில்க்வைற் அதிபர் கனகராசா தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் ''யோகமும், நல்லொழுக்கமும், சுற்றாடல் பாதுகாப்பும்'' என்னும் விடயம் பற்றி இர. சந்திரசேகரசர்மா உரைநிகழ்த்தவுள்ளார். இக் கருத்தரங்கு பிற்பகல் மூன்று மணியவில் நடைபெறவுள்ளது

புள்ளன.

## இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

(வடமராட்சி)

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை கிராமிய மட்டத்தில் நடமாடும் சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதன் முதற்கட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு பருத்தித்துறை ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் இந் நடமாடும் சேவையில் மகளிர் பொற்கணக்கு, சிறுவர் சேமிப்புத் திட்டம் போன்றவற்றின் பயன்களும் அதன் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைப்பார்.

இச் சேவை நடைபெறும் இன்றைய தினம் 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் பெயரிலும், மகளிர் பெயரிலும் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பித்து வைக்கப்படும்.

(யே )

கள் சங்க காலி மாவட்டக் கிளை ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைத்திருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, கடந்த பயங்கரவாத காலத்தில் இலங்கை முழுவதும் ஏற்படுத்தப்பட்ட தடுப்பு முகாம்களிலும், புனர்வாழ்வு நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களிடம் பொய் வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஏமாற்றி விட்டனர். சில தடுப்பு முகாம்களில் கைதிகள் தப்பி ஓட முயன்றனர் எனக்கூறி, வெடி வைத்துக் கொலை செய்தனர். அவை விசாரணை இன்றிப் போய்விட்டன.

## மட்டக்களப்பு செல்ல பஸ் ஏற அகதிகள் மறுப்பு

### அகதிகளுக்கு உதவி நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா அகதி முகாமில் உண்ணாவிரதமிருக்கும் அகதிகளை மட்டக்களப்பு கூட்டிச்செல்ல சமூகசேவை திணைக்களம் 10 பஸ்களை கொண்டு சென்ற போதிலும் அதில் ஏற அகதிகள் மறுத்து விட்டனர். முகாமின் வாயிலை மூடிவிட்டு இவர்கள் தொடர்ந்து முகாமிற்குள் உண்ணாவிரதமிருக்கின்றனர்.

இதேசமயம் இம்முகாமிலுள்ள 330 அகதிகளுக்கும் அரசு இதுவரை அளித்துவந்த உதவிகளை நிறுத்திக்கொண்டு விட்டது.

## விருவிக்கப்பட்ட வாலிபர் மீண்டும் பொலீசாரால் கைது

### அமைச்சர் செல்லச்சாமி ஆட்சேபம்

விமானப் படையினரால், இரத்மலானைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு, கல்கிசை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட மூன்று மலையகத் தமிழ் இளைஞர்கள் உயர் பொலிஸ் அதிகாரியின் உத்தரவையடுத்து மீண்டும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது பற்றி தெரிய வருவதாவது; இவர்கள்மூவரும்தையல் வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் இரத்மலானைப் பகுதியில் காக்கி நிறத்தை ஒத்த காற்சட்டைத் துணிகளை வாங்கி வரும்போது விமானப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளதுடன், ஜனாதிபதியுடன் பேச்சு நடாத்தி எடுத்த முடிவுகள் உதாசீனம் செய்யப்படுவதால் இது பற்றி தான் மீண்டும் ஜனாதிபதியின்கவனத்திற்குகொண்டு வரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அளவத்துக்கொட பகுதியைச் சேர்ந்த கதிரவேலு சுப்பையா, ஜி. சுரேஷ்குமார், சிதம்பரம் அசோகன் ஆகிய மூன்றுபேருமே மீண்டும் கைது செய்யப்பட்டவர்கள்.

### 500 பேர் கைது

கடந்த வார ஆரம்பத்தில் கொழும்பிலும் புறநகர் பகுதியிலும் பொலிஸார் நடத்திய தேடுதலின் போது 300 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான சிலரிடம் தகுந்த ஆவணங்களோ, கொழும்பில் தங்கியிருக்க சரியான காரணங்களோ இல்லை என பொலிசார் கூறினர். கைதான அநேகமானோர் வட பகுதியை சேர்ந்தோர். சிலர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சந்தை விலை விபரம் (21-06-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல் வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லி யடி | பருத்தி த்துறை | கொடி காமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 30.00 | 29.15 | 30.00 | 27.30 | 29.50 | 28.50 | 29.30 | 31.25 |
| 02. | கோதுமை மா | '' | 13.00 | 12.80 | 13.00 | 13.85 | 13.00 | 14.00 | 12.30 | 13.30 |
| 03. | சீனி | '' | 49.00 | 62.00 | — | 51.30 | 53.00 | 50.00 | 49.30 | 50.50 |
| 04. | கத்தரி | '' | 14.65 | 23.30 | 12.30 | 18.00 | 17.65 | 14.00 | 18.00 | 12.30 |
| 05. | வெண்டி | '' | 34.00 | 36.30 | 19.65 | 28.00 | 12.65 | 20.00 | 24.65 | — |
| 06. | பாகல் | '' | 24.30 | 35.60 | 28.30 | 50.00 | 30.00 | 40.00 | 33.30 | 33.30 |
| 07. | புடோல் | '' | 14.00 | 22.30 | 10.00 | 22.00 | 17.65 | 18.75 | 20.00 | 20.65 |
| 08. | பயற்றங்காய் | '' | 39.30 | 43.65 | 32.30 | 37.30 | 37 00 | 28.00 | 28.30 | 23.00 |
| 09. | தக்காளி | '' | — | — | — | — | 60.00 | 80.00 | — | — |
| 10. | வாழைக்காய் | '' | 35.65 | 41.30 | 25.65 | 38.00 | 35.00 | 35.00 | 35 00 | 40.00 |
| 11. | பீற்றூட் | '' | 22.00 | 31.67 | 17.50 | 40.00 | 19.00 | — | 22.00 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 15.50 | 16.65 | 16.50 | 17.30 | 14.80 | 14.50 | 15.15 | 09.65 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 80.00 | 93.65 | 75.00 | 140.00 | 86.65 | 100.00 | 66.65 | 100.00 |
| 14. | எலுமிச்சை | '' | 121.60 | 125.00 | 113.30 | 123.30 | 112.50 | 90.00 | 91.65 | 100.00 |
| 15. | வெங்காயம் | '' | 13.30 | 17.00 | 11.30 | 16.55 | 17.00 | 16.50 | 19.65 | 16.65 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | '' | 31.00 | 34.65 | 35.00 | 37.00 | 30.00 | 40.00 | 30.00 | 25 65 |
| 17. | இறால் | '' | 100.00 | 105.00 | 73.30 | 106 65 | 90.00 | 100.00 | 100.00 | 40.00 |
| 18. | பெரியமீன் | '' | 160.00 | 160.00 | 150.00 | 160.00 | 131.65 | 160.00 | 200.00 | 120.00 |
| 19. | சிறியமீன் | '' | 155.00 | 110.00 | 80.00 | 63.30 | 93.30 | 50.00 | 35.00 | — |
| 20. | முட்டை | ஒன்று | 08.75 | 08.80 | 08.50 | 08.40 | 08.00 | 08.00 | 08.30 | 06.50 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

# யாழ். இளைஞர் லண்டனில் கொலை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரபோஸ் அமரசிங்கம் (29 வயது) என்கின்ற தமிழ் இளைஞர் கடந்தவாரம் லண்டனில் இனம் தெரியாதோரினால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

சவுத்தோல் என்ற இடத்திலுள்ள பூங்காவொன்றில் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

புல்தரையில் வீழ்ந்து கிடந்த இவர் ஆடாமல் அசையாமல் கிடப்பதுகண்டு ஒருவர் பொலிசாருக்கு தகவல் கொடுத்தமையை அடுத்து ஸ்தலத்திற்கு வருகை தந்த பொலிசார் சடலத்தைக் கைப்பற்றினர்.

உதைபந்தாட்டத்திற்கு பேர்போன மேற்படி நபர் வெம்பிளியில் வசித்து வந்தார். இங்கு ஆசியமக்கள் அதிகம் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

கொலையாளியைப் பிடிக்க உதவுமாறு கோரி லண்டனில் பொலிசார் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். மேலும் அமரசிங்கத்தின் 47 வயது சகோதரர் ஒருவரும் லண்டனில் வாழ்கின்றார்.

# தமிழரைக் கைதுசெய்து மோசமாக நடத்துகின்றனர்

## லக்ஷ்மன் ஜெயக்கொடி கவலை

(கொழும்பு)

அப்பாவித் தமிழர்களைக் கைதுசெய்து மோசமானகுற்றவாளிகளுடன் ஒன்றாகச் சிறையில் அடைத்துவிட்டுப் புலனாய்வுப் பணியகத்தின் அறிக்கை வந்த பின்னர் தான் அவர்களை விடுதலைசெய்ய முடியும் எனக் கூறுவது நாகரீக உலகில் வேறு எங்குமே கேள்விப்படாத ஒரு விடயம் எனச் சுதந்திரக்கட்சியின் கம்பஹா மாவட்ட எம் பி லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலநீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அப்பாவித் தமிழர்கள் அநாவசியமாகக் கைது செய்யப்படும்போது ஐ தே. க அரசில் இருக்கும் கணேசலிங்கமும், மோதிலால் நேருவும் இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# பிரச்சினைக்கு தீர்வுகாண பேச்சுவார்த்தையாம்

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்வதாக வெளியுறவு இணை அமைச்சர் ஜோன் அமரதுங்கா வியன்னாவில் தெரிவித்தார். வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமை மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# அநாதரவாக விடப்பட்ட சைக்கிள் மீட்பு

[தென்மராட்சி]

அநாதரவாக விடப்பட்ட சைக்கிள் மீட்கப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி இரவு கொடிகாமம் சந்தையில் அநாதரவான நிலையில் சைக்கிள் ஒன்று விடப்பட்டு கொடிகாமம் இரவு நேர வர்த்தக விழிப்புக்குழுவினரால் மீட்கப்பட்டு தற்போது சாவகச்சேரி காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சைக்கிள் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக்கொள்ளலாம். (86)

# சைக்கிள் பறிப்பு

(தென்மராட்சி)

வவுனியா பகுதியில் இருந்து தாண்டிக்குளபக்கமாக கடந்த கிழமை சிறிலங்கா இராணுவத்தினர் சிறிதுயார் தூரம் முன்னேறி திரும்பும் போது அங்கு வாடகைக்கு சைக்கிள் ஓட்டும் சைக்கிள் ஓட்டுனர்களின் சைக்கிள்களைகொண்டு சென்றுள்ளதாக அங்கிருந்து

# இசைக் கச்சேரி

உரும்பராய் கற்பக விநாயகர் ஆலய 5ஆம் திருவிழா நாளான இன்று இரவு சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ. க.

# முஸ்லிம் நலன்களை பாதுகாக்க புதிய அமைப்பு

முஸ்லிம்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பொன்று நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ. ஸி எஸ். ஹமீத் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாகாணசபைத் தேர்தல்களையடுத்து ஏழு மாகாணங்களிலும் மொத்தம் 17 முஸ்லிம்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும், ஆனால் கடந்தமுறை நடந்தமாகாணசபைத்தேர்தல்களில்முஸ்லிம்கள்மொத்தம் 32 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்றும் இது தொடர்பாக முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனமாற்றத்தின் வெளிப்பாடாகவே அமைச்சர் ஹமீத் புதிய அமைப்பை ஆரம்பிக்க நேர்ந்துள்ளது எனவும் கொழும்பு தகவல்கள் கூறுகின்றன.

அத்துடன் காலி, மாத்தறை கேகாலை, பதுளை, மொனராகல போன்ற இடங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்த போதும் இம்முறை முஸ்லிம் ஒருவர்கூட தெரிவு செய்யப்படாமல் போனமை குறித்தும், தேசியக் கட்சிகள் எதுவும் தமது போனஸ் ஆசனங்களைத் தானும் முஸ்லிம்களுக்கு ஒதுக்காதது குறித்தும் முஸ்லிம்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

எனவே தான் முஸ்லிம்கள் தேசியக் கட்சிகளுடன் இணைந்து செற்பட்டாலும்கூட இ. தொ. காவை போல பேரம் பேசும் சக்தியைக் கொண்டிருக்க வேண்டும் என்று முஸ்லிம்கள் பலரும் கருதுவதாகவும் தெரியவருகிறது.

# புலிகளின் அடுத்த இலக்கு இராணுவ தளபதி சிசிலாம்

## கொழும்பு பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணவே விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல் இலக்கு என இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் எச்சரித்துள்ளன. இது குறித்து இராணுவத் தளபதி சிசிலுக்கும் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை உயர் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத் தளபதி மீதான கொலைத்தாக்குதல் அடுத்த மூன்று மாதங்களினுள் நடத்தப்படலாம் என்றும் இராணுவ புலனாய்வு வட்டாரங்கள் குறிப்பிட்டன. இதனையடுத்து புலிகளின் இத்தகைய தாக்குதல்களை தடுக்கும் பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்கொலைத்தாக்குதல் உட்பட எந்தவிதமான தாக்குதலையும் தடுக்க எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு வெளியிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

# பயணிகள் தவறவிட்ட பெருந்தொகை பணம் மீட்பு

[தென்மராட்சி]

1993ஆம் ஆண்டு2ஆம்மாதப் பகுதியில கிளாலிக் கடற்கரையில் பயணம் செய்த பயணிகளால்தவறவிடப்பட்டபெரும் தொகையான பணப்பை ஒன்றை இனம் தெரியாதவர்கள் எடுத்துச் சென்றதாக கிடைத்த தகவலின் படி கடந்த 10ஆம் திகதி சாவகசேரிச் காவல்துறையினர் அவ் இனம் தெரியாத நபர்களைக் கைது செய்தனர்.

மேற்படி நபர்கள் கடும் விசாரணையின் போது பணம் எடுத்ததை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே இப்பணத்தை தொலைத்தவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி சாவகச்சேரி காவல்துறையினரிடம் பெற்றுக் கொள்ளலாம். (86)

விடுவிக்கப்பட்டவர்களும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யுத்தக் கைதிகளின் பெறறோர், உறவினர்கள் சிலரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் பருத்தித்துறை துறை முகத்தில் தரித்து நின்ற 'நரோமா' கப்பல் மூலம்சென்றடைந்தனர்.

இவர்களை ஏற்றிச் செல்வதற்காக காங்கேசன்துறையிலிருந்து காலை 9.30 மணிக்கு நரோமா பருத்தித்துறைதுறைமுகத்தை நோககிப் புறப்பட்டது. 10 30 மணியளவில் கப்

...டடத் தளபதி திரு. அன்பு. யாழ். மாவட்ட அரசியல் நிர்காகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, திரு. தங்கன், வடமராட்சி தளபதி திரு. அருணா, வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் ஆகியோரும் வந்தனர். சரியாக 11 மணிக்கு சகலரையும் ஏற்றிக் கொண்டு இழுவைப் படகு 'நரோமா' கப்பலை நோக்கி புறப்பட்டது. 11 20 மணிக்கு நரோமாகப்பலுக்குள்சகலரும் அமர்ந்து கொண்டனர். யுத்தக் கைதிகள், பெற்றோர்

ஓர் அரசை

வழங்கிய பேட்டியின் போது மாங்குளம் பொலிஸ் நிலைய முற்றுகையின் போது, விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட பொலிஸான அம்பாறை லாச குலவைச் சேர்ந்த திரு. சரத் சுமந்த (வயது 21) தெரிவித்தார்.

அவர் மேலும் எமது செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில்:

மாங்குளம் பொலிஸ் நிலைய முற்றுகையின் போது கைது செய்யப்பட்ட தான், சுமார் 3 வருட காலம் விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் யுத்தக்

# ராஜீவ் கொலைவழக்கு மீண்டும் ஆரம்பம்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கு பூந்தமல்லி சிறையில் நேற்று மீண்டும் ஆரம்பமானது. குற்றவாளிகள் சார்பில் வழக்கறிஞர் வாதம் நடந்தது.

''1985 இல் தமிழக மக்கள் அனைவருமே - நீதிபதி, அரச ஊழியர் என அனைவரும் தத்தம் ஒருநாள் ஊதியத்தை விடுதலைப் புலிகளுக்கு அளித்தனர். எனவே இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் புலிகளுககு ஆதரவுகாட்டினர் என்ற ஒரே குற்றத்திற்காக குற்றவாளிகளாக ஆக முடியாது'' என வழக்கறிஞர் வாதிட்டார்.

முதல் எதிரியான பாக்கியநாதன புலிகளின் தலைவர்களின்ஒருவரான பேபி சுப்பிரமணியத்திற்கு கடிதம் எழுதியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டச் சரியான காரணமாக இருக்காது எனக் குறிப்பிட்ட வழக்கறிஞர், கடிதத்தை வைத்துக் கொண்டு அவர் குற்றவாளி என்று கூறமுடியாது என்றார்

தனிப்பட்ட புகைப்பட கலைஞரான சுபாசுந்தரம் கொலை நடந்த இடத்திலிருந்து கமராவை திரும்ப பெற முயன்றார். அது ஆதாரங்களை அழிக்க செய்த முயற்சியல்ல. புகைப்பட கலைஞன் என்ற வகையில் தன்படங்களை விரைவில் வெளியிட வேண்டும் என்ற ஆர்வமே காரணம் என்றார். அவ்வழக்கறிஞர் சுபாசுந்தரம் லண்டனிலிருந்த கிட்டுவுடன் தொடர்புபட்டவர் என கூறப்படுகிறது. தமிழகத்தில் பலரும் புலிகளுடன் தொடர்புகொண்டிருந்தனர். அவர்கள் அனைவருமே ராஜீவ் கொலையை அறிந்து வைத்தனர் என்று பொருளல்ல என்றும் வழக்கறிஞர் சுட்டிக் காட்டினார்.

புலிகளின் கோரிக்கைகளை

# நிபந்தனைகள் ஏதுமின்றி அரசாங்கம் ஏற்றது

## - பிரிகேடியர் வீரசேகரா

(யாழ்ப்பாணம்)

''தமது காவலில்உள்ளபோர்க் கைதிகளை விடுவிக்க ஏழு பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்குமாறு விடுதலைப் புலிகள் என்னிடம் கோரினர். இதைநான் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். அரசு அனைத்தையும் நிபந்தனையின்றி ஏற்றது'' இவ்வாறு புனர்வாழ்வு ஆணைநர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர 'புலிகளின் குரல்' வானொலிக்கு தெரிவித்தார்.

''தடைநீக்கப்படுவதற்கான பிரகடனம் அரசின் சார்பாக ஹமில்டன் வனசிங்காவினால் வெளியிடப்பட்டது. பொருள் விநியோகம் வடபகுதிக்கு வர பல நாட்கள் நீடிக்கும் என்பதால் உடனடி நடவடிக்கையாக ஐந்து பொலிசாரை விடுதலை செய்வதாக விடுதலைப் புலிகள் கூறினர் அத்துடன் மற்றைய பொலிசாரை இனி போர்க்கைதிகளாகக் கருத மாட்டோம் என்றும் புலிகள் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட ஐவரையும் யாழ். அரச அதிபருடன் கொழும்பு அனுப்பிவைத்தேன் நான் மற்றைய பொலிசாருடன் இங்கு தங்கியிருப்பேன்.

விநியோகத்தை விரைவுபடுத்துமாறு கொழும்பிலுள்ள அதிகாரிகளைகோரியுள்ளேன். விநியோகம் மேற்கொள்ளப்

மேலும்தெரிவித்தார்.

இதேவேளை இப்போது விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் உடன்பாடு கண்டுள்ளனர். இதன்படி இந்தப் பிள்ளைகள் இப்போது யுத்தக் கைதிகளல்ல. இந்த உடன்பாட்டிற்கு அமைய தடை நீக்கப்பட்ட பொருள்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்படவேண்டும் அவ்வாறு அனுப்பப்படாவிட்டால் அரசு பொய் கூறியதாகவே கருதப்படும்என பிரிகேடியர் ஆனந்த வீரசேகர தெரிவித்தார்

நேற்று முன்தினம் இரவு போர்கைதிகளின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து அவர்களிடையே பேசிய பிரிகேடியர், ''குறிக்கப்பட்ட பொருள்கள் இங்கு வரும் வரை உங்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவே நான் இங்கு தங்கியிருக்க தீர்மானித்துள்ளேன் அந்த பொருள்கள் இங்கு வந்தபின் நாம் அனைவரும் கொழும்பு செல்லலாம்'' என்றும் கூறினார்.

# வீரவணக்க கூட்டம்

கடற்புலிகள் பிரதேசம் தவிர்ந்த வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் ஆனி மாதங்களில் வீரச்சாவெய்திய ஆறுமாவீரர்களுக்கான வீர வணக்கக் கூட்டம் நின்று புட்டளை விநா

மூலம் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்வதாக வெளியுறவு இணை அமைச்சர் ஜோன் ... உரிமை மாநாட்டில் பேசுகை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## அநாதரவாக விடப்பட்ட சைக்கிள் மீட்பு

[தென்மராட்சி]

அநாதரவாக விடப்பட்ட சைக்கிள் மீட்கப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி இரவு கொடிகாமம் சந்தையில் அநாதரவான நிலையில் சைக்கிள் ஒன்று விடப்பட்டு கொடிகாமம் இரவு நேர வர்த்தக விழிப்புக்குழுவினரால் மீட்கப்பட்டு தற்போது சாவகச்சேரி காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சைக்கிள் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக்கொள்ளலாம். (86)

## சைக்கிள் பறிப்பு

(தென்மராட்சி)

வவுனியா பகுதியில் இருந்து தாண்டிக்குளபக்கமாக கடந்த கிழமை சிறிலங்கா இராணுவத்தினர் சிறிதுயார் தூரம் முன்னேறி திரும்பும் போது அங்கு வாடகைக்கு சைக்கிள் ஓட்டும் சைக்கிள் ஓட்டுனர்களின் சைக்கிள்களைகொண்டு சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (86)

## இசைக் கச்சேரி

உரும்பராய் கற்பக விநாயகர் ஆலய 5ஆம் திருவிழா நாளான இன்று இரவு சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ. க. இராமநாதனின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத் தளபதி மீதான கொலை நதாக்குதல் அடுத்த மூன்று மாதங்களினுள் நடத்தப்படலாம் என்றும் இராணுவ புலனாய்வு வட்டாரங்கள் குறிப்பிட்டன. இதனை

1993 ஆம் ஆண்டு 2 ஆம் மாதப் பகுதியில கிளாலிக் கடற்கரையில் பயணம் செய்த பயணிகளால்தவறவி -ப்பட்டபெரும் தொகையான பணப்பை ஒன்றை இனம் தெரியாதவர்கள் எடுத்துச் சென்றதாக கிடைத்த தகவலின் படி கடந்த 10ஆம் திகதி சாவகசேரிச் காவல்துறையினர் அவ் இனம்

மேற்படி நபர்கள் கடும் விசாரணையின் போது பணம் எடுத்ததை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே இப்பணத்தை தொலைத்தவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி சாவகச்சேரி காவல்துறையினரிடம் பெற்றுக் கொள்ளலாம். (86)

விடுவிக்கப்பட்ட

வினர்களும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யுத்தக் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் சிலரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் பருத்தித்துறை துறை முகத்தில் தரித்து நின்ற 'நரோமா' கப்பல் மூலம்சென்றடைந்தனர்.

இவர்களை ஏற்றிச் செல்வதற்காக காங்கேசன்துறையிலிருந்து காலை 9.30 மணிக்கு நரோமா பருத்தித்துறைதுறைமுகத்தை நோககிப் புறப்பட்டது. 10 30 மணியளவில் கப்பல் பருத்தித்துறையை வந்தடைந்தது. பகல் 10.45 மணியளவில் விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகள், உறவினர்கள், பெற்றோர்கள், சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினரின் வாகனங்களில் துறைமுகத்தை வந்தடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள்பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

இவர்களை வழியனுப்பி வைப்பதற்காக யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு. யாழ். மாவட்ட அரசியல் நிர்காகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி, திரு. தங்கன், வடமராட்சி தளபதி திரு. அருணா, வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் ஆகியோரும் வந்தனர். சரியாக 11 மணிக்கு சகலரையும் ஏற்றிக் கொண்டு இழுவைப் படகு 'நரோமா' கப்பலை நோக்கி புறப்பட்டது. 11 20 மணிக்கு நரோமாகப்பலுக்குள்சகலரும் அமர்ந்து கொண்டனர். யுத்தக் கைதிகள், பெற்றோர்கள், உறவினர்கள், அனைவரது முகங்களும் மலர்ந்தன. விடுதலைப் புலிகள் பிரமுகர்களுக்கு கைகொடுத்து, கையசைத்து புன்னகையுடன் 11.45 மணிக்கு கப்பலில் புறப்பட்டனர்.

இக்கப்பலில்யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டார். (யோ) [30]

ஓர் அரசை

வழங்கிய பேட்டியின் போது மாங்குளம் பொலிஸ் நிலைய முற்றுகையின் போது, விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட பொலிஸான அம்பாறை லாச குலவைச் சேர்ந்த திரு. சரத் சுமந்த (வயது 21) தெரிவித்தார்.

அவர் மேலும் எமது செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில்:

மாங்குளம் பொலிஸ் நிலைய முற்றுகையின் போது கைது செய்யப்பட்ட தான், சுமார் 3 வருட காலம் விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளில் ஒருவராக இருந்ததாகவும், அவர்கள் எமது நலனில் அக்கறை கொண்டு நடந்தனரென்றும், புலிகளின் அபிலாஷைகள் என்னவென்பதும் தமக்கு தற்பொழுது தெரிந்துள்ளதென்றும், குறிப்பிட்ட அவர் இதுபற்றி தாம் தென் பகுதிக்குச் சென்றதும் சிங்கள மக்களுக்கும், சிறிலங்கா அரசுக்கும் எடுத்துரைப்போம் என்றும் கூறினார். (யோ)(30)

நர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர 'புலிகளின் குரல்'வானொலிக்கு தெரிவித்தார்.

''தடைநீக்கப்படுவதற்கான பிரகடனம் அரசின் சார்பாக ஹமில்டன் வனசிங்காவினால் வெளியிடப்பட்டது. பொருள் விநியோகம் வடபகுதிக்கு வர பல நாட்கள் நீடிக்கும் என்பதால் உடனடி நடவடிக்கையாக ஐந்து பொலிசாரை விடுதலை செய்வதாக விடுதலைப் புலிகள் கூறினர். அத்துடன் மற்றைய பொலிசாரை இனி போர்க்கைதிகளாகக் கருத மாட்டோம் என்றும் புலிகள் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட ஐவரையும் யாழ். அரச அதிபருடன் கொழும்பு அனுப்பிவைத்தேன் நான் மற்றைய பொலிசாருடன் இங்கு தங்கியிருப்பேன்.

விநியோகத்தை விரைவு படுத்துமாறு கொழும்பிலுள்ள அதிகாரிகளைகோரியுள்ளேன். விநியோகம் மேற்கொள்ளப்பட சில தினங்கள் பிடிக்கலாம். விநியோகம் வந்து சேர்ந்ததும் மற்றையவர்களை விடுதலை செய்வதாக விடுதலைப் புலிகள் உறுதியளித்துள்ளனர் என்றும் பிரிகேடியர் வீரசேகர

அனுப்பப்படாவிட்டால் அரசு பொய் கூறியதாகவே கருதப் படும்என பிரிகேடியர் ஆனந்த வீரசேகர தெரிவித்தார்

நேற்று முன்தினம் இரவு போர்கைதிகளின் உண்ணா விரதத்தை முடித்து வைத்து அவர்களிடையே பேசிய பிரிகேடியர், ''குறிக்கப்பட்ட பொருள்கள் இங்கு வரும்வரை உங்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவ நான் இங்கு தங்கியிருக்க தீர்மானித்துள்ளேன் அந்த பொருள்கள் இங்கு வந்தபின் நாம் அனைவரும் கொழும்பு செல்லலாம்'' என்றும் கூறினார்.

## இனப்பிரச்சினை

சிறிலங்கா அரசு முன்வைக்கப் போவதாகவும் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவது சம்பந்தமாக ஒரு கூட்டுத் திட்டம் இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் இல்லை என்றும் தெரிவித்தார்.

புலிகளை நிராயுதபாணிகளாக்குவதற்கான இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று அவர் மேலும் கூறினார்.

முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவைச் சந்தித்துப் பேசினார்.

## வீரவணக்க கூட்டம்

கடற்புலிகள் பிரதேசம் தவிர்ந்த வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் ஆனி மாதங்களில் வீரச்சாவெய்திய ஆறுமாவீரர்களுக்கான வீர வணக்கக் கூட்டம் இன்று புட்டளை விநாயகர் ஆலய முன்றலில் இரவு 8 மணிக்கு நடைபெறும்.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் நினைவுப்பேருரைகளும், வடமராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (யோ)

## குருபூசை

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடாத்தும் மணிவாசகர் குருபூசையும், விழாவும் நாளை பிற்பகல் 2மணிக்கு வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயிலில் நடைபெறும்.

பொருளாதார

தாக சிறிலங்கா வானொலி நேற்று அறிவித்தது. ஏனையவர்கள் இப்பொருள்கள் வட பகுதி சென்றடைந்ததும் விடுவிக்கப்படுவர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.


## தேவை

## மருந்து விற்பனையாளர்

தகைமைகள்:- க.பொ.த. [சா/த] பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியும், ஏனைய பாடங்களில் சாதாரண சித்தியுடன்,

1. மருந்தாளர் கற்கை நெறியொன்றைப் பூர்த்தி செய்தவர்கள்

அல்லது

2. மருந்துக் கலவையாளர்கள்

அல்லது

3. மருந்து விற்பனை நிலையமொன்றில் விற்பனையாளராக 5 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றவர்கள்.

வயதெல்லை:- 40 வயதுக்குட்பட்டோர்

விண்ணப்ப முடிவுத் திகதி:- 26-06-1993

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி;-

விளம்பர இல. 191

மே / பா ஈழநாதம்

31, மகேந்திரா வீதி,

யாழ்ப்பாணம்.

(5191)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 22-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 9960

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-4672, 42-7312, 28-4545, 40-1516, 26-4139, 26-7039, 26-1461, 26-3638, 24-6855, 24 5734, 28-3289, 26-0535, 27-1927, 26-6628 41-7693, 26-7525, 24-4170, 24-0528, 26-8424, 27-5099, 27-6704, 22-3611, 24-4323, 26-0736, 24-4854, 24-8353, 22-3887, 27-5406, 24-5958, 28-4255,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை.


ஸ்ரீதர்

யாழ்ப்பாணம்

தெய்வேந்திரா

சாவகச்சேரி

திரையரங்குகளில்




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6867)


## மரண அறிவித்தல்

## சின்னையா கந்தையா

ஊர்காவற்துறை, தம்பாட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், 'மயூரன் குடியிருப்பு' களையோடை அம்மன் கோயில், நவாலி எனும் இடத்தில் வசித்தவருமாகிய சின்னையா கந்தையா என்பவர் நேற்றுமாலை அவரது இல்லத்தில் காலமானார். இவர் திருமதி அன்னம்மாவின் அன்புக்கணவரும், மனோன்மணி, மார்க்கண்டு, சந்தனம், அன்னலிங்கம், இந்திரன் (பிரான்ஸ்), புஸ்பவதி, செல்லன், முருகநாதன், நைலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், குமாரவேலு, சநதரா, செல்வராசா, திலகவதி, லலிதா, அழகராசா, கருணாதேவி, இராசாத்தி, கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகலிங்கம், வள்ளியம்மை, சின்னம்மா, முத்துப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) 23-6-1993 புதன் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நவாலி கொத்துக்கட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மக்கள், மருமக்கள்.

(சி/6883)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.